படுத்திருக்க வேண்டுமென்றும், தண்ணீர் குடிப்பதற்குங் கூட அவன் எழுந்திருக்கக் கூடாதென்றும், ஒரு வைக்கோல் குழாய் வழியாய் அவன் தண்ணீர் குடிக்க வேண்டுமென்றும் பெற்றோருக்கு உத்தரவிட்டிருந்தனர். அவனுடைய நிலைமை அவ்வளவு மோசமாயிருந்தது. அவனுடைய பெற்றோர்கள் இங்கே கூடாரத்துக்கு வருகிற உண்மையுள்ள விசுவாசிகள்.

11 சில இரவுகளுக்கு முன்னர், ஞாயிறன்று சுகமளிக்கும் ஆராதனை ஒன்று நடத்தப்போவதாக நாங்கள் அறிவித்தோம். ஆனால் உங்கள் கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டுமெனக் கருதி சுகமளிக்கும் ஆராதனை நடத்த வேண்டாமென்று நாங்கள் முடிவு செய்தோம்.

12 ஆனால் ஒரு சிறு விஷயத்தை மாத்திரம் என் இருதயத்துக்குள் நான் வைத்துக் கொண்டிருந்தேன்.

13 அந்த பையனின் தாயும், தகப்பனும் என்னிடம் வந்து, அவனை கூடார அறைக்குள் கொண்டு வரலாமா என்று கேட்டனர். அவர்கள் அந்த சிறு பையனை அங்கே கொண்டுவந்தபோது, அவன் சுகமடைந்துவிட்டதாக பரிசுத்த ஆவியானவர் அறிவித்தார்.

14 ஆகவே, பரிசுத்த ஆவியானவர் கூறியதை பெற்றோர் விசுவாசித்து, அவனை வீட்டிற்கு கொண்டு சென்று, பின்னர் அந்த சிறுவனை பள்ளிக்கூடத்திற்கு அனுப்பினார்கள்.

15 வைத்தியர் அதை அறிந்தார், ஆயினும் மருத்துவருக்கோ அத்தகைய காரியம் அதிருப்தியை அளித்திருந்தது. எனவே அவர் தாயாரிடம், சிறுவன் படுக்கையிலிருக்க வேண்டுமென்று மறுபடியும் கூறினார். அந்த அம்மாள் வைத்தியரிடம் நடந்ததை விவரமாகக் கூறினாள். அந்த மனிதன் ஒரு ஸ்தாபனத்தைச் சேர்ந்த கிறிஸ்தவ விசுவாசி என்று நான் அறிந்துகொண்டேன். அந்த மருத்துவர் ஏழாம் நாள் ஆசரிப்பு ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர் என்று நான் நினைக்கிறேன். எனவே அவர் தாயாரிடம், “நல்லது, நீங்கள் செய்ய வேண்டியது…சிறுவனை நான் பரிசோதித்தாவது பார்க்கட்டும்” என்றார்.

அவளும் “மிக நல்லது” என்று கூறினாள்.

16 அந்த இருதய கீல்வாத ஜுரம் எங்குள்ளது என்று மருத்துவர் பரிசோதிக்க அந்தப் பிள்ளையை இரத்த பரிசோதனைக்காகக் கொண்டு சென்றனர். வைத்தியர் மிகவும் அதிசயமுற்றார் என்று நான் அறிகிறேன். என்ன செய்வதென்றே அவருக்குத் தெரியவில்லை. அந்தச் சிறு பையன் முற்றிலும் குணமடைந்து விட்டான். ஒன்றும்…? காணப்படவில்லை.

17 இப்பொழுது சகோதரன் காலின்ஸ், சகோதரி காலின்ஸ் இங்கு உள்ளனரா? நான் ஒருவேளை அதை தவறாகக் கூறியிருக்கலாம். நான் விரும்புவது……சகோதரி காலின்ஸ், அது சரியா? ஆம். சரி. ஆம். அது ஏறக்குறைய ஆறு, அல்லது ஏழு வயது சிறுவனான மிக்கி காலின்ஸ் ஆகும்.

நான்—நானறிவேன். நீங்களெல்லாரும் உங்கள் சபையாரின் எண்ணிக்கையைக் கூட்டிக் கொண்டே போகலாம். அவர் மாத்திரம் செய்யக்கூடாதா?” என்று வாதாடினார். பாருங்கள்? அவர் ஒரு ரோமன் கத்தோலிக்கர்; அவர் எனக்கு மிகவும் நல்ல ஒரு நண்பன். ஆம் ஐயா.

46 ஒரு—ஒரு கத்தோலிக்க வாலிபன், எனது உண்மையான உயரிய ஆத்ம நண்பன் ஒரு நாள் என்னிடம் பேசிக்கொண்டிருந்தார், அவர் இரும்பு சாமான்கள் விற்கும் கடைஒன்றை வைத்திருந்தார். அவர் என்னிடம், “பில்லி எங்கள் மார்க்க முறையில் உமக்கு விசுவாசமில்லையென்பதை நானறிவேன்” என்றும், “ஆனால் ஒரு விஷயத்தை உம்மிடம் கூற விரும்புகிறேன். நீர் எங்களுக்காக ஏறெடுத்த ஜெபத்தை தேவன் அங்கீகரித்திருக்கிறார். ஆகவே, இத்தேசத்தில் உமக்கு எங்காகிலும் தொங்தரவு நேர்ந்தால், தேசத்திலுள்ள எல்லா கத்தோலிக்கர்களும் உம்மைப் பாதுகாக்க வருவார்கள்” என்றார். ஆகவே, நீங்கள் பாருங்கள். அது…

47 அவர் “சிலுவையை முதுகில் சுமந்த ஒவ்வொருவனும்” என்று கூறினர். அவர் கூறிய வண்ணமாகவே, நான் அதை உங்களுக்கு கூறப் போகிறேன். உண்மையாகவே ஆதி கிறிஸ்தவர்கள் தங்களுடைய முதுகில் சிலுவைகளை சுமந்த காரணத்தால் அது அவர்கள்தான் என்று அவர்கள் உரிமை கோரினர். நாம் அதை சரித்திரத்தின் மூலம் அறிந்துகொள்கிறோம். இன்றைய கத்தோலிக்கர், அவர்கள்தாம் ஆதி கிறிஸ்தவர்கள் என்று உரிமை கோருகின்றனர். ஒரு வகையில் அது உண்மைதான். ஆனால் ஸ்தாபன முறைமைகள் அவர்களை வழி விலகச் செய்தது. நீங்கள் பாருங்கள்.

48 அந்த ஜனங்கள், ஒரு கத்தோலிக்கனோ அல்லது யூதனோ அல்லது யாராயிருந்தாலும் அவர்களெல்லாரும் நாம் பிறந்த அதே மரத்திலிருந்து பிறந்த மானிடராயிருக்கிறார்கள். பாருங்கள்? அது சரி. அவர்களும்—அவர்களும் நம்மைப் போலவே புசிக்கின்றனர், குடிக்கின்றனர், உறங்குகின்றனர். மற்றவர்களை நேசிக்கின்றனர். ஆகவே தனிப்பட்ட நபர்களை நாம் குறை கூறக்கூடாது. இல்லை. இல்லை. பாருங்கள்? நாம் தனிப்பட்டவர்களை குறை கூறக்கூடாது.

49 ஆனால் அதே சமயத்தில் ஒரு ஊழியக்காரன் என்னும் முறையில், அந்த ஜனங்களை கடிக்கும் சர்ப்பத்தை அங்கேயே நான் தகர்க்க வேண்டியதாயிருக்கிறது. நீங்கள் பாருங்கள். நான்—நான்… அது நான் தேவனிடத்திலிருந்து பெற்றுள்ள ஊழியமாயிருப்பதால், (Commission) அப்படிச் செய்ய நான் கடமைப்பட்டுள்ளேன், பாருங்கள். அதில் நான் உண்மையாயும் விசுவாசமுள்ளவனாயும் நிலைத்திருக்க வேண்டும்.

50 ஆனால் கத்தோலிக்கர், யூதர், முகம்மதியர், கிரேக்கர், கிரேக்க வைதீக சபையைச் சேர்ந்தவர் இவர்களில் யாராவது ஜெபம் செய்துக்கொள்ள இங்கு வந்தால், என்னுடையவர்களுக்கு

விசுவாசியுங்கள். நீங்கள் எளிமையுள்ளவர்களாகும் போது அதைக் கண்டு கொள்வீர்கள். அங்குதான் காரியம். அவர் எளிமையுள்ளவராக இருப்பதற்காக அவர் தம்மை எளிமையுள்ளவராக செய்து கொண்டதற்காக அவருக்கு நான் மிகுந்த நன்றி கூறுகிறேன். இப்பொழுது வெளிப்படுத்தல் 6-ம் அதிகாரம் 9-ம் வசனத்தை நாம் பார்ப்போம். இப்பொழுது நான் வாசிக்கத் துவங்கட்டும்.

*அவர் ஐந்தாம் முத்திரையை உடைத்தபோது, தேவ வசனத்தினிமித்தமும் தாங்கள் கொடுத்த சாட்சியினிமித்தமும் கொல்லப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களைப் பலிபீடத்தின்கீழே கண்டேன்.*

69 கவனியுங்கள், ஐந்தாம் முத்திரை திறக்கப்படுவதை அறிவிக்க ஒரு ஜீவன் இங்கு இல்லை. ஆனால் நான்காம் முத்திரையை அறிவிக்க ஒரு ஜீவன் இருந்தது என்பதை இப்பொழுது நினைவில் கொள்ளுங்கள். அவ்வாறே முதலாவது, இரண்டாவது, மூன்றாவது, நான்காவது முத்திரைகளை அறிவிக்க ஒவ்வொரு ஜீவன் இருந்தது. ஆனால் இங்கு எந்த ஜீவனும் இல்லை. பாருங்கள்?

70 இப்பொழுது நீங்கள் கவனிப்பீர்களானால், நாம் முத்திரைகளில் ஒன்றைப் பார்ப்போம். நாம் நான்காவது முத்திரைக்குத் திரும்பிச் செல்வோம். பாருங்கள். அதுதான் ஏழாவது வசனம்.

*அவர் நாலாம் முத்திரையை உடைத்தபோது, நாலாம் ஜீவனானது; நீ வந்து பார் என்று சொல்லுஞ் சத்தத்தைக் கேட்டேன்.*

*அவர்...மூன்றாம் முத்திரையை உடைத்தபோது, மூன்றாம் ஜீவனானது நீ வந்து பார் என்று சொல்லுஞ் சத்தத்தைக் கேட்டேன்.*

*...இரண்டாம் ஜீவனானது...வந்துபார்...*

*...முதலாம் ஜீவனானது, நீ வந்து பார் யார் என்று சொல்லுஞ் சத்தத்தைக்கேட்டேன்.*

71 ஆனால் ஐந்தாம் முத்திரை உடைக்கப்பட்டபோது எந்த ஜீவனும் அங்கில்லை. இப்பொழுது சற்று கவனியுங்கள்.

*அவர் ஐந்தாம் முத்திரையை உடைத்தபோது, பலிபீடத்தின் கீழே...*

72 உடனடியாகவே! பாருங்கள்—எந்த மிருகமும், ஜீவனும் அங்கே—அங்கே இல்லை. மிருகம் என்பது வல்லமையை குறிக்கிறது. நாம் அதை அறிவோம், பாருங்கள்? அங்கே எந்த ஜீவனும் இல்லை.

73 இப்பொழுது அந்த ஜீவன் ஒவ்வொன்றையும், சபையின் காலங்களை நாம் படித்தபோது, முதலாம் ஜீவன் சிங்கத்திற்கொப்பாகவும், இரண்டாம் ஜீவன் காளைக்கொப்பாகவும்,

நேசிப்போமாக. பாருங்கள்? உண்மையாகவே அவ்விதமாகத்தான் நாம் செய்ய வேண்டும்.

110 இயேசு, "களைகள் காணப்படும்" என்று கூறியுள்ளார் என்பதை நீங்கள் அறிவீர்கள். அவைகளைப் பிடுங்கும்போது, நாம் கோதுமையையும் பிடுங்கிவிடாதபடி அவைகளை வளரவிடவேண்டும். பாருங்கள், அவர் செய்வார்...அதற்கேற்ற தருணம் வரும்போது அவரே இவ்விரண்டையும் வெவ்வேறாகப் பிரிக்கட்டும். பாருங்கள்? அதுவரை இவ்விரண்டும் ஒன்றாகவே வளரட்டும்.

111 கவனியுங்கள். அந்திக் கிறிஸ்து ஒரு மிருகத்தின் மீதேறி புறப்பட்டுச் சென்றபோது, அவனுடைய வல்லமை.

112 ஓ! இது எனக்கதிக பிரியம்! நான் இப்பொழுது பக்திபரவசப்படத் தொடங்குகிறேன். அது ஊக்க உணர்ச்சியினால் ஏற்படுகின்றது என்று நினைக்கிறேன். கவனியுங்கள், அந்திக்கிறிஸ்து...ஓ! அந்த வெளிப்பாடு அந்த அறையில் தொங்கும் அக்கினிப் பந்து முன்னால் கிடைக்கப் பெறும்போது! ஓ சகோதரனே! அதை நான் சிறிய வயது முதல் கண்டு கொண்டேயிருந்தாலும், ஒவ்வொரு முறையும் அது என் அண்மையில் வரும்போது, எனக்குத் திகில் உண்டாகிறது. அவர் என்னை உணர்வற்ற மயக்கத்துள்ளாக்குகிறார். நீங்கள் ஒருபோது அதைக் கண்டு பழக்கமாகிக்கொள்ள முடியாது. அது மிகவும் புனிதமானது.

113 கவனியுங்கள், அந்திக் கிறிஸ்து அவன் ஊழியமாகிய தன்னுடைய (நான்காம்) மிருகத்தின் மீதேறி சென்றபோது, அதனுடன் போரிட தேவன் ஒரு மிருகத்தை அனுப்பினார். பாருங்கள்? இப்பொழுது கவனியுங்கள். ஒவ்வொரு முறையும் அந்திக்கிறிஸ்து, (மிருகமாகிய) தன்னுடைய குதிரையின் மேலேறிச் சென்று அவனது ஊழியத்தை அறிவிக்கும்போது, அதனுடன் போரிட தேவனும் அவருடைய மிருகத்தை அனுப்பினான். அவர் தன்னுடைய யுத்தத்தை அதற்கு அறிவிக்க, அவர் அதன்மேல், அந்த ஜீவன்மேல் (Beast) இருந்தார்.

114 இப்பொழுது "வெள்ளம்போல் சத்துரு வரும்போது, கர்த்தருடைய ஆவியானவர் அவனுக்கு விரோதமாய்க் கொடியேற்றுவார்" என்று வேதம் கூறுகின்றது.

115 எனவே சத்துரு அந்திக்கிறிஸ்துவாகப் புறப்பட்டுச் சென்றபோது, அவனைச் சந்திக்க ஒருவிதமான வல்லமையை தேவன் அனுப்பினார். அப்பொழுது அவர்கள்...

116 அவன் சிவப்பு நிற குதிரையின் மேல் சவாரி செய்பவனாக மறுபடியும் சென்றான். வேறொரு நிறம், வல்லமை, ஊழியத்தின் மேலேறிச் சென்றபோது, அதனுடன் போரிட்டு தம்முடைய சபையைக் காத்துக் கொள்ள தேவன் வேறொரு ஜீவனை அனுப்பினார்.

உங்களை தாழ்த்திக்கொள்ள முடிந்தாலும் உங்களால் அதை ஒருபோதும் அறிந்துகொள்ளவே முடியாது என்று உங்களை உணரச் செய்கிறதல்லவா? அது மிக அழகான தாழ்மை என்பதை நீங்கள் அறிவீர்கள். ஓ என்னே! ஆம்.

252 “அவர்கள் தேவனுடைய வார்த்தையைப் பற்றிக் கொண்டிருந்தனர்”. அவர்கள் யூதர்கள்; அவர்கள் தங்களுடைய நியாயப்பிரமாணத்தை உடையவர்களாயிருந்தனர். அதனோடு அவர்கள் நிலைத்திருந்தனர். நேற்று இரவைக்குறித்து உங்களுக்கு ஞாபகம் உள்ளதா? பாருங்கள்? அதனோடு அவர்கள் நிலைத்திருந்தனர். அவர்கள் யூதர்கள். அவர்களிடம் தேவனுடைய நியாயப்பிரமாணம் இருந்தது. அதில் அவர்கள் நிலைக்கொண்டிருந்தனர். அது உண்மை. “அவர்கள் கடைபிடித்திருந்த சாட்சியினிமித்தம் உயிர்த்தியாகம் செய்து மரித்தனர்.” அவர்கள் தாம் சபை எடுக்கப்பட்ட பின்னர் பலிபீடத்தின் கீழ் காணப்படும் ஆத்துமாக்கள்.

253 இப்பொழுது, கவனியுங்கள். அவர்கள் தங்களுடைய குருட்டுத்தனத்தினால் அவர்களுடைய மேசியாவைச் சங்கரித்தனர். அதற்கான பலனை இப்பொழுது அவர்கள் அனுபவித்துக்கொண்டிருக்கின்றனர். அவர்கள் அதை அறிந்துகொள்வார்கள், சபை எடுக்கப்பட்ட பின்னர் அவர்கள் இதை அறிந்து கொல்வார்கள். தேவனுடைய பலிபீடத்தின் முன் அவர்கள் வரும்போது, அவர்கள் அவரைக் கண்டு, அதை உணருவார்கள். ஆனால் தேவனுடைய கிருபை அவர்களிடத்திற்கு இப்பொழுது வருகிறது.

254 கவனியுங்கள், இப்பொழுது, அவர்கள் எக்காரணத்தைக் கொண்டும் பரிசுத்தவான்களாய் இருக்க முடியாது. ஏனெனில் பரிசுத்தவான்கள் ஏற்கனவே அங்கிகள் தரித்திருப்பார்கள். ஆனால் இங்கு இவர்கள் தேவவசனத்தினிமித்தமும், தேவனுடைய பிள்ளைகள் என்பதால் “அவர்கள் கொண்டிருந்த சாட்சியினிமித்தமும் கொல்லப்பட்டு, இப்பொழுது பலிபீடத்தின் கீழ் காணப்படும் ஆத்துமாக்கள்,” யூதர்களாயிருக்கிறார்கள்.

255 ஆனால் இப்பொழுது, கவனியுங்கள். சபை எடுக்கப்பட்ட பின்னர் தேவனுடைய கிருபை அவர்களுக்குண்டாகிறது. இயேசு அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு வெள்ளை அங்கியைக் கொடுக்கிறார். (ஓ, என்னே, கவனியுங்கள்; சபையானது போய்விட்டப் பிறகு), ஏனெனில் அவர்கள் தங்கள் நோக்கத்திற்கு விசுவாசமுள்ளவர்களாயிருந்தனர். அவர்கள் குருடாக்கப்பட்டனர். ஆனால் அவர்கள் குருடரென்று அறியாமலிருந்தனர். அவர்கள் அதை அறியவில்லை. அவர்கள் செய்யவேண்டுமென்று தேவன் முன் குறித்ததை அவர்கள் சரியாகச் செய்து முடித்தனர். இங்கே யோவான் இந்த ஆத்துமாக்களைத்தான் பலிபீடத்தின் கீழ் காண்கிறான். இப்பொழுது கவனியுங்கள், அவன் அந்த

